# நெருக்கடி தொடர்பில் அறிக்கையிடும் போது எவ்வாறு சிறைத்தண்டனைக்கு ஆளாகாமல் இருப்பது

பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரம் என்பது இலங்கை சட்டத்தில் உள்ள அடிப்படை உரிமையாகும். எவ்வாறாயினும், இந்த சுதந்திரங்கள் முழுமையானவை அல்ல என்பதுடன், தற்போது அரசாங்கம் ஊடகங்களில் அதிகளவான மட்டுப்படுத்தப்பட்ட விளைவைக் கொண்டிருக்கக்கூடிய பரந்த அதிகாரங்களை எடுத்துக்கொண்டுள்ளது. சட்டம் மற்றும் உங்கள் செயற்பாடுகளின் சாத்தியமான விளைவுகளை அறிந்துகொள்வது, நீங்கள் வெளியிடுகின்ற விடயத்திற்கான அபராதம் மட்டுமல்லாது, குற்றவியல் பொறுப்புகள் கூட ஏற்படாமலிருப்பதற்கு அவசியமானதாகும்.

**உங்களுக்கு தெரியுமா?**

அரசியல் அபிப்பிராயம் தொடர்பான உங்கள் எண்ணங்களை அரசியலமைப்பு பாதுகாக்கிறது. பத்திரிகைகளில், தனியாருக்குச் சொந்தமான மற்றும் அவர்களால் கட்டுப்படுத்தப்படுகின்ற பத்திரிகைகளில் கூட அரசாங்கத்திற்கு எதிரான செய்திகள் மற்றும் பார்வைகளை விலக்குவது அல்லது ஒடுக்குவது சமமாக நடத்துவதற்கான உரிமையை மறுப்பதுடன் பாரபட்சமாக கருதப்படுகிறது.

## உங்கள் உரிமைகளைப் புரிந்துகொள்ளுதல்

பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம் என்பது ஒருவரின் நம்பிக்கைகள் மற்றும் கருத்துக்களை வாய் வார்த்தை, எழுத்து, அச்சிடுதல், படங்கள் அல்லது வேறு எந்த முறையிலும் சுதந்திரமாக வெளிப்படுத்தும் உரிமை என்று உச்ச நீதிமன்றம் குறிப்பிடுகின்றது. இதில் பத்திரிகை சுதந்திரம் மற்றும் எண்ணங்களை பரப்புதல் ஆகியவை அடங்கும் (ஜோசப் பெரேரா. சட்டமா அதிபர், 1992 1 SLR 19).



## இந்த உரிமையின் நோக்கம் பின்வருவனவற்றை அங்கீகரிப்பதற்காக நீட்டிக்கப்பட்டுள்ளது:

- ஊடக சுதந்திரம்
- தகவலை பெறுவதற்கும் பதிவு செய்வதற்குமான உரிமை
- தகவல்களைத் தேடுவதற்கும் பெறுவதற்குமான உரிமை
- தகவல் மற்றும் யோசனைகளை வழங்குவதற்கான உரிமை

## ஊடக சுதந்திரத்தை கட்டுப்படுத்தியிருக்க முடியுமா?

இலங்கையின் சட்டங்கள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், கருத்துச் சுதந்திரம் மற்றும் வெளியீட்டுச் சுதந்திரத்தின் கட்டுப்பாடுகள் அரசியலமைப்பின் கீழ் அனுமதிக்கப்படுகின்றன. இவை கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான சட்டப்பூர்வமான கட்டுப்பாடுகளென்பதுடன் எக்காரணம் கொண்டும் தவிர்க்கப்பட முடியாதவையாகும்.

## கருத்துச் சுதந்திரத்தை அரசாங்கம் சட்டப்பூர்வமாக கட்டுப்படுத்தும் சந்தர்ப்பங்கள் கீழே உள்ளன:

- இன மற்றும் மத ஒற்றுமை நோக்கத்திற்காக
- பாராளுமன்ற சிறப்புரிமை
- நீதிமன்ற அவமதிப்பு
- அவதூறு அல்லது குற்றத்திற்கு தூண்டுதல்

USAID FROM THE AMERICAN PEOPLE
IREX

பொது சுகாதாரம் மற்றும் ஒழுக்கத்தின் பொதுக் கட்டளை மற்றும் பாதுகாப்பு

ஜனநாயக சமுதாயத்தின் பொது நலனுக்கான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்தல்

முப்படைகளுக்குரிய (இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை) பிரயோகத்தில், அவர்களின் கடமைகளை சரியான முறையில் நிறைவேற்றும் நோக்கிற்காக கட்டுப்படுத்தல்.

தேசிய பாதுகாப்பு






நீங்கள் பார்த்தவரை, பேச்சு சுதந்திரத்திற்கான இந்த விதிவிலக்குகள் மிகவும் பரந்தவை என்பதுடன் பொருட்கோடலுக்குத் திறந்திருக்கும். இது ஊடகங்கள் மீது அரசுக்கு அதிகளவான கட்டுப்பாட்டை வழங்கும்.

## மனதில் கொள்ள வேண்டிய சட்டங்கள்

சட்டம் குறிப்பாக தேசிய பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கம் தொடர்பான விடயங்களில் நிர்வாகிக்கு ஓரளவு நெகிழ்வுத்தன்மையை அனுமதிக்கிறது. இது தொடர்பாக நிறைவேற்று அதிகாரியின் அதிகாரங்களுக்கு சட்டம் எல்லைகளை உருவாக்கவில்லை என்பதால் இந்த சட்டப்பூர்வ விருப்புரிமை துஷ்பிரயோகம் செய்யப்படலாம். எனவே, அரசுக்கு எதிரான எந்தவொரு கருத்து வேறுபாடுகளையும் கட்டுப்படுத்த சட்டம் பயன்படுத்தப்படலாம் என்பதுடன், இது ஊடக சுதந்திரத்திற்கு மோசமான செய்தியாக இருக்கும்.



## நீங்கள் மனதில் கொள்ள வேண்டிய சில முக்கிய சட்டங்கள் பின்வருமாறு:

திருத்தப்பட்ட 1947 இன் பொதுமக்கள பாதுகாப்பு கட்டளைச் சட்டம் இல. 25, (**"PSO"**) மற்றும் அவசரகால ஒழுங்குவிதிகள்.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்கைப் பாதுகாத்தல் மற்றும் சமூகத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல் மற்றும் சேவைகளைப் பேணும் நோக்கத்திற்காக அவசரகால ஒழுங்குவிதிகளை பிரகடனப்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு PSO அதிகாரம் அளிக்கிறது. ஒருமுறை பிரகடனப்படுத்தப்பட்டால் (வர்த்தமானியில் வெளியிடப்படுவதன் மூலம்), இந்த ஒழுங்குவிதிகள் அரசாங்கத்தின் பிற சட்டங்களை விட மேலோங்கி இருப்பதுடன் எந்த நீதிமன்றத்திலும் கேள்வியெழுப்ப முடியாது.

அவசரகால ஒழுங்குவிதிகள் தற்காலிகமானவை என்பதுடன், PSO இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையின் மூலம் புதுப்பிக்கப்படாவிட்டால் இரண்டு முதல் நான்கு வாரங்களுக்கு இடையில் நீடிக்கும். ஒழுங்குவிதிகள வெளியிடப்பட்டதும், அவை அனைவருக்கும் பொருந்துவதுடன், ஊடகங்களை மோசமாகப் பாதிக்கும் கருத்து மற்றும் பேச்சு சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் சில பரந்த நடவடிக்கைகளையும் அவை கொண்டிருக்கலாம். அவசரகால ஒழுங்குவிதிகளுக்கு இணங்காமை பொதுவாக குற்றவியல் பொறுப்பை ஈர்க்கிறது. அவசரகாலச் சட்டம் மே 6, 2022 அன்று அறிவிக்கப்பட்டு, மே 20, 2022 வரை நீடிக்கப்பட்டது. தற்போது, அவசரகால சட்டங்கள் எதுவும் நடைமுறையில் இல்லை.

### தண்டனைச் சட்டக்கோவை

தண்டனைச் சட்ட கோவையில் குற்றங்கள் மற்றும் தண்டனைகள் தொடர்பான சட்டங்கள் உள்ளதுடன், இது அனைவருக்கும் பொருந்தும் பொதுவான சட்டமாகும். அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட கருத்து மற்றும் பேச்சு சுதந்திரத்தை கட்டுப்படுத்தக்கூடிய பல “சட்டபூர்வமான கட்டுப்பாடுகளை” தண்டனைச் சட்டக்கோவை பரிந்துரைக்கின்றது. ஊடக சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் தண்டனைச் சட்ட கோவையில் பொதுவாக உருவாக்கப்பட்ட ஏற்பாடுகளில் ஒன்று பிரிவு 120 ஆகும், இது ஜனாதிபதி மற்றும் அரசுக்கு எதிராக “அதிருப்தியை தூண்டுவது அல்லது தூண்ட முயற்சிப்பது” குற்றமாகும் என குறிப்பிடுகின்றது.

## நீதிமன்ற அவமதிப்பு (அரசியலமைப்பு)

“நீதிமன்ற அவமதிப்பு” என்பது இலகுவான சொற்களில் நீதிமன்றத்தின் உத்தரவை மீறுவதைக் குறிக்கிறது. நீதித்துறையின் ஒழுங்கான நிர்வாகத்தைத் தடுக்கும் அல்லது தலையிடும் எந்தவொரு நடத்தையையும் குறிக்கவும் இது விளக்கப்படலாம். நீதி நிர்வாகம் மற்றும் நீதித்துறையின் சுதந்திரம் ஆகியவற்றின் மீது பொதுமக்கள் நம்பிக்கை வைப்பது எந்த ஒரு ஜனநாயக செயன்முறைக்கும் முக்கியமானதாக கருதப்படுகிறது. எந்தவொரு ஊடகமும் எவ்வகையிலும் நீதித்துறையில் தலையிட முயன்றால், நீதித்துறை நிர்வாகத்தின் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்தால், அது “நீதிமன்ற அவமதிப்பு” குற்றச்சாட்டாக கருதப்படும். அரசியலமைப்பின் பிரிவு 105(3) நீதிமன்ற அவமதிப்பு விடயங்களைக கையாள்வதற்கு உச்ச நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கின்றது.

## திருத்தப்பட்ட 1953ம் ஆண்டின் 21ம் இலக்க பாராளுமன்ற (அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள்) சட்டம்.

“பாராளுமன்ற சிறப்புரிமை தொடர்பாக” பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரம் மீதான மட்டுப்பாட்டை அரசியலமைப்பு அங்கீகரிக்கிறது. உதாரணமாக, நாடாளுமன்றத்தின் பணியில் தலையிடுவதாகக் கருதப்படும் எந்தவொரு அறிக்கைகள் அல்லது செயற்பாடுகளைத் தண்டிப்பதற்கு பாராளுமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் ஆகிய இரண்டிற்கும் சட்டம் அதிகாரம் அளிக்கிறது. பாராளுமன்ற விவாதங்களின் (HANSARD) அதிகாரபூர்வ அறிக்கையிலிருந்து நீக்கப்பட்ட ஒரு ஆக்கம் அல்லது அறிக்கையை வெளியிடுவதும், சபை நடவடிக்கைகள், நாடாளுமன்றத்தின் தன்மை அல்லது பாராளுமன்ற உறுப்பினரது நடத்தைக்கு அவதூறு விளைவிக்கும் வகையில் கருதப்படும் எந்தவொரு அறிக்கையையும் வெளியிடுவதும் இதில் அடங்கும்.

USAID FROM THE AMERICAN PEOPLE
IREX

## 2007 ம் ஆண்டின் 56ம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை சட்டம்

இந்த சட்டமானது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கையில் (ICCPR) உள்ள அரசியலமைப்பு அல்லது சட்டமன்ற நடவடிக்கைகள் மூலம் செயற்படுத்தப்படாத உறுப்புரைகளை செயற்படுத்த உதவுவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த சட்டம் நபர் சட்டத்தின் முன் ஒரு நபராக அங்கீகரிக்கப்படுவதற்கான உரிமை, நியாயமான விசாரணைக்கான உரிமை, சிறுவர் உரிமைகள், அரசாங்கத்தில் பங்குகொள்ளும் உரிமை மற்றும் பொது சேவைகளை சமமாக அணுகுவதற்கான உரிமை ஆகியவற்றைப் பாதுகாக்கிறது. மேலதிகமாக, எந்தவொரு “பாகுபாடு, விரோதம் அல்லது வன்முறையைத் தூண்டும் தேசிய, இன அல்லது மத வெறுப்புக்கும் எதிரான” பாதுகாப்புகளைக் கொண்டுள்ளது.

## 1979ம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடு) சட்டம் (திருத்தப்பட்டது) [“PTA”]

PTA என்பது இலங்கையில் பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாத அச்சுறுத்தல்களைக் கையாள்வதற்காக இயற்றப்பட்ட ஒரு விசேட சட்டமாகும், மேலும் இது ஒரு தற்காலிக ஏற்பாடாகும். இருப்பினும், இந்தச் சட்டம் இடைநிறுத்தப்படவில்லை அல்லது ரத்து செய்யப்படவில்லை என்பதுடன் நடைமுறையில் உள்ளது. PTA இன் பிரிவு 2(A) ஊடகம் மற்றும் ஊடகவியலாளருக்கு நேரடியாகப் பொருந்தக்கூடியது.



# மனதில் கொள்ள வேண்டிய சில விடயங்கள் இதோ!




அரசியலமைப்பின் கீழ் பாதுகாக்கப்பட்ட உங்க-ளுடைய அடிப்படை உரிமைகளின் மீதான எந்தவொரு அரச அதிகாரி அல்லது பொது நிறுவனத்தின் தன்னிச்சையான கட்டுப்பாடுகள் அல்லது மீறல்கள் உச்ச நீதிமன்றத்தில் சவால் செய்யப்படலாம். இருப்பினும், சட்டரீதியான கட்டுப்பாடுகளை சவால் செய்ய முடியாது.

அரசியலமைப்பின் 11வது பிரிவு (சித்திரவதையிலிருந்து சுதந்திரம்) ஒவ்வொரு நபருக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்ட ஒரு முழுமையான உரிமையாகும், மேலும் மேலே குறிப்பிட்டுள்ளபடி எந்தவொரு “சட்டப்பூர்வ கட்டுப்பாடுகள்” உட்பட எந்தவொரு காரணத்திற்காகவும் எந்த வகையிலும் கட்டுப்படுத்த முடியாது.

உங்களின் அடிப்படை உரிமை மீறல்களுக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய உங்களுக்கு உரிமையுண்டு, ஆனால் இந்தத் தீர்மானங்கள நடைமுறைப்படுத்தப்படாது.

உங்கள் உரிமை துஷ்பிரயோகம் செய்யப்பட்டால் அல்லது மீறப்பட்டால் அது ஒவ்வொரு சம்பவத்தின் சூழ்நிலைகளின் அடிப்படையில் மட்டுமே மதிப்பிடப்படும். அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கும் வகையில் விவரமான விதிகளை நிறுவுவது கடினமாகும்.

உங்கள் உரிமைகள் மீறப்படுவதாக நீங்கள் உணரும் சூழ்நிலைகளில், சட்ட ஆலோசனை மற்றும் பிரதிநிதித்துவத்தைப் பெறவும்.

# உதவிச்சேவைகள்



சட்ட உதவி ஆணைக்குழுக்கள் மற்றும் நிலையங்கள்:
**https://www.gic.gov.lk/gic/index.php?option=com_org&Itemid=4&id=8&task=org&lang=en**

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்:
**0773723823 (Prasad Perera AAL)**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு:
**https://www.hrcsl.lk/home/ (Hotline - 1996)**

அவசர அம்பியுலன்ஸ் சேவை: **Hotline - 1990**

உளநல உதவிக்கு:
**CCC Foundation: Helpline - 133**

**NIMH**: உதவிச்சேவை - **1926**

## கைது செய்யப்படும் ஆபத்திலிருந்து உங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது?

நீங்கள் ஒரு ஊடகவியலாளராக இருந்தால், பொதுமக்களின் எதிர்ப்புத் தளத்தில் பணிபுரியும் போது எப்போதும் உங்கள் ஊடக சின்னம் மற்றும் உடையை அணியுங்கள். உங்களின் அடையாள அட்டையை எப்போதும் வெளித்தெரியும்படியும் உங்கள் கழுத்தில் இருப்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் குடிமகன் ஊடகவியலாளராக இருந்தால், வன்முறையாக மாறக்கூடிய எந்தக் கூட்டங்களிலிருந்தும் உங்களை விலக்கிக் கொள்ளவும்.

வன்முறையாக அல்லது வன்முறையைத் தூண்டுவதாகக் கருதப்படும் எந்தவொரு வாய்மொழி அல்லது உடல் ரீதியான செயற்பாடுகளிலும் பங்கேற்க வேண்டாம்!

எக்காரணம் கொண்டும் எந்த ஒரு அரச உத்தியோகத்தரும் தமது கடமைகளை மேற்கொள்வதற்கு இடையூறு செய்யாதீர்கள்.



நீங்கள் கைது செய்யப்பட்டால் ஒருவரைத் தொடர்பு கொள்வதற்கு தயாராக இருங்கள் (முன்கூட்டியே திட்டமிடுங்கள், அவசரத் தேவைகளுக்காக ஒரு குடும்ப உறுப்பினர் அல்லது சக ஊழியரை விரைவு அழைப்பில் (Speed dial) வைத்திருங்கள், நீங்கள் கைது செய்யப்பட்டால் உங்கள் சார்பாகத் தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு சட்டத்தரணியின் தொலைபேசி இலக்கத்தை வழங்கவும்).

உங்கள் சாதனத்தில் **KeepSafe** போன்ற தனியுரிமை செயலிகளைப் பதிவிறக்கம் செய்து அனைத்துத் தகவலையும் சேமிக்கவும், இதனால் விடயங்களை அல்லது சம்பவங்களை சேகரிக்கும் போது நீங்கள் பெறக்கூடிய ரகசியத் தகவல் மற்றும் ஆதாரங்களை மூன்றாம் தரப்பினரால் அணுகவும் நீக்கவும் முடியாது.

உங்களின் செய்தி சேகரிப்பு உண்மைகளின் அடிப்படையில் இருப்பதை எப்போதும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். மேலே குறிப்பிட்டுள்ளபடி “சட்டப்பூர்வமானது” என்று கருதப்படும் எல்லைகளுக்குள் வெளிப்படுத்தப்பட வேண்டிய தகவல் உள்ளதா என்பதை உறுதிப்படுத்த உங்கள் உள்ளடக்கத்தை மீண்டும் படியுங்கள். பட்டியலிடப்பட்டுள்ள சட்டங்களின் நியதிகளுக்குள் பணியாற்றுவது உங்களின் கைது மற்றும் தடுப்புக்காவல் அபாயங்களைக் குறைக்கலாம்.

